*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 161/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-6 (LW-2)***

*Name / Father's Name:* ***திரு.விக்னேஷ் த/பெ. பழனிமுத்து***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **02.02.2026.**

துவக்க நேரம் 01.11 A.N

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது செந்தாரப்பட்டியில் குடியிருந்து, சென்டரிங் வேலை செய்து வருகிறேன். எனக்கு வழக்கு சம்பவத்தை குறித்து எதுவும் தெரியாது. நான் எதையும் பார்க்கவில்லை. போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள். அடிச்சதை பார்த்தீர்களா என்று போலிசார், என்னை கேட்டார்கள், நான் பார்க்கவில்லை என்றுதான் சென்னேன்.

**அரசுத்தரப்பு சாட்சி போலிசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 23.04.2023 அன்று மாலை சுமார் 05.30 மணியளவில் எனது சொந்தவேலையாக சென்றுவிட்டு எனது ஊரான கந்தசாமிபுதூரில் உள்ள சந்தியா என்பவரின் வீட்டிற்கு அருகே வந்தபொழுது வெங்கடேசன் என்பவர், சந்தியாவிடம் பிரச்சனை செய்துகொண்டிருந்ததால் எதற்கு அந்த பெண்ணிடம் பிரச்சனை செய்ற என்று நான் கேட்டேன் என்றும், அப்பொழுது வெங்கடேசன்,

சந்தியாவை கெட்ட வார்த்தையால் திட்டி, அவரது கை மற்றும் அவரது தலைமுடியை பிடித்து இழுத்து, அவரது வலது பக்க காதில் ஓங்கி அரைந்து, அவருக்கு கொலைமிரட்டல் விடுத்தான் என்றும், அதனை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்பொழுது எதிரி எனது ஊர்க்காரர் என்பதால் எதிரியை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 01.18 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.02.02 17:42:14 +0530

Judicial Magistrate No.2, Attur.